இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அவருடைய கட்டளைகளை நாம் கடைப்பிடித்தால் நாம் அவரை அறிந்துகொண்டோம் என்பது உறுதியாகத் தெரியும். "அவரை எனக்குத் தெரியும்" எனச் சொல்லிக்கொண்டு அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்காதோர் பொய்யர்; உண்மை அவர்களிடம் இராது. ஆனால் அவரது வார்த்தையைக் கடைப்பிடிப்போரிடம் கடவுளின் அன்பு உண்மையாகவே நிறைவடைகிறது; நாம் அவரோடு இணைந்து இருக்கிறோம் என அதனால் அறிந்துகொள்ளலாம். (1யோவா 2: 3-5)

# மலேசிய கிறிஸ்தவக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பிலிருந்து பிரியாவிடை பெறும் பேராயர் ஜூலியன் லியாவ் பெங் கிம் அவர்களின் உரை (சுருக்கம்)

கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

கடந்த ஓர் ஆண்டு காலத்தை, எதிர்ப்பார்க்காத, சவாலான, பாதுகாப்பற்ற, பதட்டம் மற்றும் நிச்சயமற்ற நிலை கொண்ட காலமெனக் விவரிக்கலாம். நாம் அனைவரும் ஏதோ ஒரு வழியில் பற்பல இடையூறுகளை அனுபவித்தோம். இவ்வாறு நடக்கும் என்று நாம் ஒருபோதும் நினைத்ததில்லை.

கோவிட் -19 என்பது நெருக்கடிச் சூழலை உருவாக்கிய ஒரு தொற்றாகும். இது கிறிஸ்தவர்களாக நாம் உண்மையில் யார் என்பதை நமக்கு வெளிப்படுத்த உதவியது எனலாம். இக்காலக்கட்டத்தில், கிறிஸ்து அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் நமக்கு சேவை செய்ததைப் போல மற்றவர்களுக்கு சேவை செய்வதும் அன்பு செய்வதும் நம் நம்பிக்கை வாழ்வின் மையமாகும் என்பதை நினைவில் கொள்வோம்.

மற்றவர்களைக் கவனித்துக்கொள்வதற்கான இந்த செய்தி மறைநூல் முழுவதும் பொதிந்துள்ளதோடு, நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் மையமாகவும் உள்ளது. திருவிவிலியத்தில், ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்; (கலா 6:2) எனும் வேண்டுகோளை காண்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நம்மை பொறுத்தவரை பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்காக நாம் எந்தளவுக்கு அனைத்தையும் சகித்துக்கொள்கிறோம் என்பதானது, கிறிஸ்து நமக்காக என்ன செய்திருக்கிறார் என்பதை நாம் எவ்வளவு ஆழமாகப் புரிந்து கொண்டுள்ளோம் என்பதற்கான அடையாளமாகும்.

ஓர் உவமையில், நம்முடைய எதிரிகளாக நாம் காணக்கூடியவர்களைக் கூட நாம் எப்படி அன்பு செய்ய வேண்டும் என்பதை வெளிப்படுத்த இயேசு ஒரு சமாரியனைப் பயன்படுத்தினார். மற்றவர்களை அவர்களின் துன்ப துயரக் காலங்களில் கவனித்துக் கொள்வதும் உதவுவதும் நமது கிறிஸ்தவ வாழ்வுக்கு ஒரு நிபந்தனையாக அளிக்கப்பட்டுள்ளது. . 'நமக்கோ விண்ணகமே தாய்நாடு' (பிலி. 3:20) என்பதற்கேற்ப, நமது எதிர்நோக்கு இந்த மண்ணக வாழ்வில் இல்லை, மாறாக எதிர்நோக்கியிருக்கும் விண்ணக வாழ்வில் மையமிட்டிருக்கிறது. எனவே, பிறர் அன்புப் பணியில் பின்வாங்குவது, அர்ப்பண வாழ்வுக்கான அழைப்பு என்பதபதாகப் பொருள்படாது.



நான்காம் நூற்றாண்டில் உரோமை பேரரசை உளுக்கிய தொற்றுநோய் நமக்கு ஒரு புகழ்பெற்ற எடுத்துக்காட்டு என திருஅவை வரலாற்றாசிரியர் யூசிபியஸ் கூறினார். அச்சூழலில், நகரங்களை விட்டு வெளியேறுவதற்கு அல்லது தங்கள் வீடுகளை மூடிக்கொள்வதற்குப் பதிலாக "நாள் முழுவதும் [கிறிஸ்தவர்கள்] தங்களது கதவுகளைத் திறந்து வைத்து இறந்தோரை நல்லடக்கம் செய்வதிலும், நோயுற்றோரைப் பராமரிப்பதிலும் அக்கறைக் காட்டினர்' என்று யூசிபியஸ் பதிவுசெய்துள்ளார். அவர் மேலும், "சுய இலாபத்திற்கான விருப்பத்தால் நாம் உந்தப்படுகிறோமா? அல்லது அனைவரையும் தாக்கிக்கொண்டிருக்கும் இந்த தொற்றுநோய்க்கு மத்தியில் இயேசுவின் அன்பை வெளிப்புடுத்த விழைகிறோமா? எனும் வினாவை அவர் முன்வைத்தார். சமூக இடைவெளி அவசியம், ஆனால் தொடர்பில் இருக்கவேண்டியதற்கான இடைவெளி தேவையில்லை. இந்த தொற்றுநோயை எதிர்த்துப் போராட ஓர் இனமாக ஒன்றிணைவதற்கான இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வோம். நம்மில் அரசியல் மற்றும் சமய வேறுபாடுகள் இருந்தபோதிலும், அனைத்து மலேசியர்களுக்குமான ஒற்றுமையுடன் கோவிட்-19 க்கு எதிரான போராட்டத்தில் ஒன்றுபடுவோம். சமூக உறவுப் பாலத்தைக் கட்டி எழுப்புவோம்.

என் அன்பான நண்பர்களே, 2020-ஆம் ஆண்டில், எதையும் சாதிக்க முடியவில்லை என்றும் அது ஒரு வீணான ஆண்டு என்று சிலர் புலம்புகிறார்கள். மலேசிய கிறிஸ்தவக் கூட்டமைப்பின் 2019-ஆம் நாள்காட்டி நடவடிக்கைகளால் நிரம்பியிருந்தாலும், அத்தோடு, 2020-ஆம் ஆண்டின் நடவடிக்கைகளை ஒப்பிட்டு அளவிட இயலாது. மேலும், மார்ச் 2020 முதல் இயங்கலை வழி நமது கூட்டங்களில் பெரும்பகுதியை நடத்த வேண்டியிருந்தது. ஆயினும்கூட, செயலாளரின் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளபடி 2021 நமது செயல்பாடுகளுக்கு சிறந்த ஆண்டாக அமையும் என்பதை நம்புவோம்.
மலேசியாவில் உள்ள கிறிஸ்தவச் சமூகங்கள் அச்சங்களுக்கு அப்பால் முன்னேறி, கிறிஸ்தவ மீட்பின் கதையின் உறுதியான வெளிப்பாட்டிற்கான வழிகளைக் கண்டறிய வேண்டியது அவசியம். நெருங்கிய உறவு வாழ்வுக்கும் புரிதலுக்கும் மாற்றங்கள் தேவை. எனவே சமூக நல்லிணக்கத்தின் நலன்களில் மிதமான தன்மை தேவை என்பதை எற்று கடமையாற்றுவோம்.

கத்தோலிக்க திருஅவையின் வெளிச் செல்லும் முதன்மை செயலாளர் அருள்தந்தை கிளாரன்ஸ் தேவதாஸ் அவர்கள் 2010 முதல் மலேசிய கிறிஸ்தவக் கூட்டமைப்பிற்கு நன்கு அறிமுகமனாவர், அவரது கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பை நான் பாராட்டுகிறேன்.

என் அன்பு நண்பர்களே, நாம் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தால், நாம் உதவியற்றவர்களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவும் மாறக்கூடும், ஆனால் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் நம்பிக்கை உணர்வால் பார்ப்பது நம்மை மீண்டும் முன்னோக்கிப் பயணிக்க வழிவகுக்கும். நமது நாட்டில் நீதி மற்றும் அமைதிக்கான நமதுப் போராட்டத்தைத் தொடர்வோம், நல்லிணக்கம் மற்றும் நமது நாட்டின் திட்டங்களுக்குச் செயல்வடிவம் அளிக்கும் அனைவருக்கும் நன்றி இவ்வேளையில் நன்றி நவில்கிறேன்.

**பேராயர் ஜூலியன் லியாவ் கிம் பெங்**
**கோலாலம்பூர் மாமறை மாவட்டம்.**

## நம்பிக்கையின் மூச்சாக இறைவேண்டல் உள்ளது - திருத்தந்தை

நம் குடும்பங்கள், அடிப்படை திருஅவை சமூகங்கள், பங்குத்தளங்கள் ஆகியவை, நாம் இறைவேண்டல் செய்வதற்கு உதவியாக உள்ள சூழல்கள் என்பதை தெளிவுபடுத்திய திருத்தந்தை, நாம் எவ்வளவுக்கெவ்வளவு இறைவேண்டலில் வளர்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம்பிக்கையிலும் வளர்கிறோம் என்று அறிவுறுத்தினார்.



"நம் நம்பிக்கையின் மூச்சாக இறைவேண்டல் அமைந்துள்ளது. நாம் எவ்வளவுக்கெவ்வளவு இறை வேண்டல் செய்வதற்கு கற்றுக்கொள்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நம்பிக்கையிலும் வளர்கிறோம் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சமய நம்பிக்கையை வளர்க்க, பல்வேறு திட்டங்கள் வழியே முயற்சி செய்வது, கிறிஸ்தவ வழிமுறை அல்ல என்பதைத் தெளிவுபடுத்திய திருத்தந்தை, இறை வேண்டல் என்ற எண்ணெய் மட்டுமே, நம்பிக்கை என்ற விளக்கை இவ்வுலகில் தொடர்ந்து ஒளிர்விடவைக்கும் என்று கூறினார்.

# இளவரசர் பிலிப் அவர்களின் மரணத்திற்கு திருத்தந்தை இரங்கல்

**வத்திக்கான்**: முன்னாள் கப்பற்படை வீரரான பிலிப் அவர்கள், அரசி எலிசபெத்தைத் திருமணம் செய்து கொண்டபின், பெரும்பாலும் மக்கள் நலப்பணிகளில் ஈடுபட்டிருந்தார் பிரிட்டன் அரசி இரண்டாம் எலிசபெத் அவர்களின் கணவரும், பிரிட்டன் இளவரசருமான, எடின்பர்க் கோமகன் பிலிப் அவர்கள், ஏப்ரல் 09, கடந்த வெள்ளியன்று, இறைபதம் அடைந்துள்ளதை முன்னிட்டு, அந்நாட்டு அரச குடும்பத்தினருக்கு தனது அனுதாபத்தையும், இறைவேண்டல் களையும் தெரிவித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மறைவால் வருந்தும் அரசி இரண்டாம் எலிசபெத் அவர்கள் மீதும், மற்ற அனைவர் மீதும், உயிர்த்த ஆண்டவரின் நம்பிக்கை, ஆறுதல், மற்றும், அமைதி ஆகிய ஆசிர்வாதங்கள் பொழியப்படுமாறு, திருத்தந்தை இறைவேண்டல் செய்கிறார் எனவும், அச்செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், இங்கிலாந்தின் வெஸ்மினிஸ்தர் பேராயர் கர்தினால் வின்சென்ட் நிக்கோஸ் அவர்களும், இளவரசர் பிலிப் அவர்களின் கடமை தவறாத, நேர்மையான வாழ்வைப் பாராட்டியுள்ளதோடு, அரசு



*திருத்தந்தை பிரான்சிஸ், பிரிட்டன் அரசி இரண்டாம் எலிசபெத், கோமகன் பிலிப்*

இளவரசர் பிலிப் அவர்கள் இறைவனடி சேர்ந்ததை முன்னிட்டு, அரசி இரண்டாம் எலிசபெத் அவர்களுக்கு, திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பெயரால் அனுப்பியுள்ள இரங்கல் தந்தியில், அந்த அரசக் குடும்பத்தினருக்கு திருத்தந்தையின் இதயப்பூர்வமான இரங்கல் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இளவரசர் பிலிப் அவர்கள், தன் திருமணம், குடும்பம் ஆகியவற்றுக்குப் பிரமாணிக்கமாக இருந்தது, அவரின் சிறப்பான பொதுநலப் பணிகள், வருங்காலத் தலைமுறைகளின் கல்விக்கும், அவர்களின் முன்னேற்றத் திற்கும் அர்ப்பணத்தோடு அவர் ஆற்றிய பணிகள் போன்றவற்றை திருத்தந்தை பாராட்டுவதாக, அத்தந்திச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. பிலிப் அவர்களின் குடும்பத்தினருக்கும் தன் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துள்ளார்.

முதிர்ந்த வயது காரணமாக, கடந்த சில மாதங்களாக உடல்நலம் பாதிக்கப் பட்டிருந்த 99 வயது நிரம்பிய இளவரசர் பிலிப் அவர்கள், ஏப்ரல் 09, கடந்த வெள்ளியன்று, லண்டனில் இறைபதம் சேர்ந்தார்.

இளவரசர் பிலிப் அவர்கள், பிரிட்டன் அரச குடும்ப வரலாற்றில், மிக அதிக காலம் இளவரசராக இருந்தவர். முன்னாள் கப்பற்படை வீரரான பிலிப் அவர்கள், அரசி எலிசபெத்தைத் திருமணம் செய்து கொண்டபின், பெரும்பாலும் மக்கள் நலப்பணிகளில் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

*-மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

# உலக அமைதிக்காக தொடர்ந்து உழைத்து வரும் திருஅவை

**வத்திக்கான்**: இவ்வுலகிற்கு நற்செய்தியின் நம்பத்தகும் சான்றாக விளங்கும் நோக்கத்தில், திருஅவை ஒன்றிணைந்து செயல்படவேண்டியது அவசியம் என அழைப்பு விடுத்தார் திருப்பீடச் செயலர், கர்தினால் பியெத்ரோ பரோலின்.

தனக்கு கிட்டிய தேவ அழைத்தல், திருத்தந்தையுடன் திருப்பீடச் செயலரின் உறவு, இன்றைய திருஅவை, சீனா திருஅவையுடன் உறவு என பல்வேறு தலைப்புக்களில் இஸ்பானிய மொழி வானொலிக்குப் பேட்டியளித்த திருப்பீடச் செயலர், கர்தினால் பரோலின் அவர்கள், நற்செய்தி அறிவித்தலுக்கும், ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கும் இடையேயுள்ள தொடர்பு குறித்து வலியுறுத்தினார்.

ஒன்றிப்புக்காகவும், திருஅவையின் விடுதலைக்காகவும், சமயச் சுதந்திரத்திற் காகவும் உழைக்கும் திருஅவை, உலக அமைதிக்காகவும் தொடர்ந்து உழைத்து வருகிறது என்று தன் பேட்டியில் கூறிய அவர், தலத்திருஅவை திருப் பீடத்திற்கும் இடையே நிலவும் உறவுகளைப் பலப்படுத்துவதில் திருப்பீடச் செயலகம் முக்கியப் பங்காற்றி வருவதைக் குறிப்பிட்டார்.

திருஅவை தலைமைப் பீடத்தில் இடம்பெற்றுவரும் மாற்றங்கள் நல்ல பலனைத் தந்துவருகின்றன என்பதையும் குறிப்பிட்ட திருப்பீடச் செயலர், எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் திருப்பீடச் செயலராக பொறுப்பேற்க அழைக்கப்பட்ட திலிருந்து, திருத்தந்தையுடன் இணைந்து செயலாற்றி வருவதாகத் தெரிவித்தார். மிகவும் எளிமையான மனிதராக செயல்படும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நற்செய்தியை அறிவிக்கும்போது, திருஅவை, தான் அறிவிப்பதற்கு தானே நம்பத்தகும் சான்றாக விளங்கவேண்டும் என்பதை வலியுறுத்திவருவதாக மேலும் கூறினார்.

இன்றையத் திருஅவையில் பல்வேறு நிலைகளில் புதுப்பித்தலை கொண்டுவர முயலும் திருத்தந்தையின் முயற்சிகளால் முரண்பாடுகள் தோன்றிவருவது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த கர்தினால் பரோலின் அவர்கள், நம்பிக்கை, அருளடையாளங்கள், திருத்தூதுப்பணி போன்ற, மாற்றமுடியாத உண்மை நிலைகளுக்கும், புதுப்பித்தல் தேவைப்படும் அமைப்புமுறைகள், மற்றும் வழிமுறைக ளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை, சிலர் சரியாகப் புரிந்துகொள்ளாதபோது, இந்த முரண்பாடுகள் தோன்றுகின்றன என கூறினார்.

துயரமான வரலாற்றை கண்டுவந்த சீனத் திருஅவையில், நம்பிக்கைக் கீற்றுகள் தெரியத் துவங்கியுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டிய திருப்பீடச் செயலர், கர்தினால் பரோலின் அவர்கள், ஈராக் கிறிஸ்தவர்களின் சான்று பகரும் வாழ்வு, ஐரோப்பா அதன பாரம்பரிய கிறிஸ்தவ விசுவாசத்தை இழந்து வருவது, போன்றவை குறித்தும் தன் கருத்துக் களைப் பகிர்ந்துகொண்டார்.

**நோன்பு காலம் முழுவதும் இஸ்லாமியர்கள் மேற்கொள்ளும் உண்ணா நோன்பை இறைவன் ஆசீர்வதித்து, அவர்களை பெருந்தொற்றிலிருந்து காத்து, நல்ல உடல் நலத்தையும் பாதுகாப்பையும் வழங்க வேண்டுகிறேன் - கர்தினால் சாக்கோ**

# "மனம்மாறி ஆண்டவரிடம் திரும்புவோம்"

ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழாவை நாம் கொண்டாடினோம். இப்பொழுது இயேசுவின் உயிர்ப்பின் காலத்தில் நாம் பயணிக்கிறோம். பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறான இன்று நாம் வாசிக்கக்கேட்கும் வாசகங்கள் 'மனம்மாறி ஆண்டவரிடம் திரும்பிவாருங்கள்" என்ற செய்தியை நமக்கு எடுத்துரைக் கின்றன. அன்று இயேசுவின் உயிர்ப்புப் பலருக்குப் பலவிதமான தாக்கத்தையும், குழப்பத் தையும் அச்சத் தையும் ஏற்படுத்தியது. இயேசுவின் மரணத்திற்குப் பிறகு அவருக்கு நேரிட்ட மரணம் தங்களுக்கும் நேரிடும் என்ற பயத்தில் திருத்தூதர்கள் ஓர் அறையிலேயே ஒளிந்து வாழ்ந்தார்கள்.

இயேசுவின் பொதுவாழ்வில் சீடர்கள் அவரைத் தேடிச் சென்றனர். இப்போது பாடுபட்டு இறந்து உயிர்த்தப் பின்னர் ஆண்டவரே முன் வந்து அவர்களின் நடுவில் தோன்றி "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று கூறி அவர்களை வாழ்த்தினார். இயேசு அவர்கள் கண் முன்பாகக் காட்சி தந்தது அவர்களுக்கு இன்னும் அதிர்ச்சியைத் தந்தது. இறந்தவர் திரும்ப உயிர்பெற்று வர முடியுமா? ஓர் ஆவியைக் காண்பதாகவே சீடர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் இயேசு " ஏன் கலங்குகிறீர்கள், ஏன் ஐயம் கொள்கிறீர்கள்" "நான் தான்" என்று தம்மை அவர்களுக்கு முழுமையாகக் காட்டினதால் திருத்தூதர்களின் அச்சம் நீங்கியது.

"அப்போது மறைநூலைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக் கண்களைத் திறந்தார்." (லூக் 24:45) இயேசு கூறிய இந்த வாழ்த்து சீடர்களின் பயம், கலக்கம் அகன்று மகிழ்ச்சியும், தெளிவும் பிறக்கட்டும் என்பதைக் குறிப் பதாகும். திருத்தூதர்களின் அச்சம் நீங்கி முடங்கிப்போன, காய்ந்து தீய்ந்து போன அவர்களுடைய உள்ளுணர்வுகள் வலுப் பெற்றன, மீண்டும் உயிர்பெற்றன, உள்ளத் தாலும் உணர்வாலும் புது வாழ்வையும், புதிய விசுவாசத்தையும் பெற்றார்கள்.

இன்றைய முதல் வாசகத்தில் "வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்று விட்டீர்கள், ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார், இதற்கு நாங்கள் சாட்சி (திபா 3:15)" என்று அழுத்தமாக பேதுரு போதிக்கின்றார். திருத்தூதர்களின் போதனையாலும், வாழ்வாலும் திருஅவை மலர்ந்தது. இன்று நாமும் உயிர்த்த இயேசுவின் புது வாழ்வை பெற்றிருக்கின்றோம். திருஅவை கொடுக் கின்ற இறைவார்த்தைத் தெளிவுகளை உள்வாங்கி வாழ வேண்டும். நம்முடைய சாட்சியம் உண்மையானதாக அமைய வேண்டும் என்றால் பாடுகளால் காய மடைந்த இயேசுவின் உடலை அடை யாளம் காண வேண்டும்.

பேதுரு மக்களை அழைப்பதற்கு முன்னதாக, இயேசுவை மறுதலித்த குற்றத்திற்காக மனம் வருந்தி, மனம் திரும்புகின்றார். இதன்வழி, ஓர் இறை வாக்கினர்/ இறையடியார்/ இறைவாக்கை எடுத்துரைப்பவர் மக்களுக்கு மனமாற்றச் செய்தியை எடுத்துரைக்கும் முன்னதாக, அவர் மனம்திருந்தி கடவுளுக்கு ஏற்புடையவராக இருக்கவேண்டும் என்பதை நாம் அறிகிறோம்.

ஒவ்வொருவரும் மனம் மாறவேண்டும், ஏன் மனமாற்றச் செய்தியை அறிவிக்கின்றவரும் மனம் மாறவேண்டும் என்று சிந்தித்த நாம், இன்றைய இரண்டாம் வாசகத்தில் யோவான் தன்னுடைய முதல் திருமுகத்தில் கூறுகின்ற செய்தியையும் ஆழமாக சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக் கின்றோம்.

"விவிலியத்தை அறியாதவர்கள் கிறிஸ்து வையே அறியாதவர்கள்" என்கிறார் புனித ஜெரோம். திருத்தூதர்களைப் போல நமது மனமாற்றத்தால் ஆண்டவருக்குச் சான்று பகர முன்வருவோம். நாம் உயிர்த்தால்தான் இம்மண்ணில் இயேசுவின் உயிர்ப்பை அறிக்கையிட முடியும். நாம் பிறருக்கு "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்ற அமைதியை அளித்து நற்செய்தியை எங்கும் பறைசாற்றவும் முடியும்.

*-சவரிநாதன், சுங்கைபட்டாணி*

**"ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம், நம் தவறுகளையே தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பதை அவர் விரும்பவில்லை, மாறாக, நம் தவறுகளில், நமக்கு உதவிபுரியவும் அவர் விரும்புகிறார். நம் துயரங்களில் அவரது இரக்கமுள்ள அன்பு நமக்குத் தேவைப்படுவதையும் அவர் உணர்த்துகிறார்"**

*-திருத்தந்தை பிரான்சிஸ், 10-04-2021,*

**பாஸ்கா காலம் 3-ஆம் ஞாயிறு**
திப: 3: 13-15, 17-19
திபா: 4: 1. 6. 8
1 யோவான் 2: 1-5
லூக்கா: 24: 35-48
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 3**